வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 15.2.2026 நேரம் மாலை 6.10 மணி

-------------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி புதுடெல்லியில் இந்திய செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்த கண்காட்சியை நாளை தொடக்கி வைக்க உள்ளார்.
- மகா சிவராத்திரி பண்டிகை இன்று நாடு முழுவதும் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.
- 10 ஆயிரம் கோடி ரூபாய் மூலதனத்துடன் கூடிய புத்தாக்க இந்தியா 2-ஆம் கட்ட நிதிஆதரவு திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய கடலோர பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் வந்தேமாதரம் சைக்லோத்தான் விழிப்புணர்வு பேரணி இன்று புதுச்சேரி வந்து சேர்ந்தது.

<u>மோடி-கண்காட்சி</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில் இந்திய செயற்கை நுண்ணறிவின் தாக்கம் குறித்த கண்காட்சி 2026-ஐ தொடக்கி வைக்க உள்ளார். 5 நாள் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் இந்திய செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடும் நடைபெற உள்ளது. இந்தக் கண்காட்சியில் ஆஸ்திரேலியா, ஜப்பான், ரஷ்யா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்த், சுவிட்சர்லாந்து உள்ளிட்ட 13 நாடுகள் பங்கேற்க உள்ளன. இக்கண்காட்சியில் 300-க்கும் மேற்பட்ட அரங்குகள் நேரடி செயல் விளக்கங்களை நடத்த உள்ளது.

இந்நிகழ்ச்சியில் 500-க்கும் மேற்பட்ட அமர்வுகளில் செயற்கை நுண்ணறிவு தாக்கம் குறித்த கருத்தரங்குகள் நடைபெற உள்ளன. மேலும் வேளாண்மை, சுகாதாரம், நிர்வாகம் போன்றவற்றில் செயற்கை நுண்ணறிவை மேம்படுத்துவது குறித்த மாநாடும் நடைபெற உள்ளது.

*<u>மகா சிவராத்திரி</u>*

மகா சிவராத்திரி பண்டிகை இன்று நாடு முழுவதும் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது.

சிவபெருமானின் பக்தர்களுக்கு மிகவும் புனிதமாக கருதப்படும் இந்நாளில் கோவில்களில் சிறப்பு வழிபாடு, உண்ணா நோன்பு, இரவு முழுவதும் வழிபாடு போன்றவற்றை கொண்டுள்ளது. இந்நாளில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் புனித யாத்திரை தலங்களில் அமைதி மற்றும் செழிப்பிற்காக புனித நீராடி வழிபாடு நடத்தி வருகின்றனர்.

மகா சிவராத்தியை ஒட்டி, புதுச்சேரியில் உள்ள வேதபுரிஸ்வரர் கோவில், வில்லியனூர் திருக்காமீஸ்வரர்கோவில், கருவடிக்குப்பம் சித்தானந்தா கோவில், கம்பளி சாமி மடம், பாகூர் முலநாதர் கோவில் உள்ளிட்ட கோவில்களில் சிறப்பு வழிபாடுகளும், சிறப்பு பூஜைகளும் இன்று காலை முதலே நடைபெற்ற வருகின்றன. மகா சிவராத்திரியை முன்னிட்டு புதுச்சேரி கம்பன் கலையரங்கில் பாடல் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நாளை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா, உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் சிவபெருமானின் அருள் அனைத்து

குடிமக்களுக்கும் நிலைத்து நிற்கவும், இந்தியா முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று பிராத்தனை செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

மகா சிவராத்திரி தினத்தை ஒட்டி குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதா கிருஷ்ணன் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில் காசி முதல் ராமேஸ்வரம் வரை கொண்டாடப்படும் இந்த புனித பண்டிகை இந்தியாவில் பிரிக்க முடியாத ஆன்மிக உறவை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மகா சிவராத்திரி பண்டிகை இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி. அனைத்து குடிமக்களுக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். குடிமக்கள் அனைவரும் சிவபெருமானின் ஆசியைப் பெற்று வளம் பெற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த தெய்வீக ஆசிர்வாதத்தின் மூலம் நமது நாடு வளர்ச்சியின் சிகரத்தை தொட்டு செழிப்படையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள செய்தியில் இந்த புனிதமான மகா சிவராத்திரி நாளில் கடவுளுக்கு எல்லாம் கடவுளான மகா தேவர் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும், மகிழ்ச்சியையும் முன்னேற்றத்தையும் அளிக்க வேண்டும் என கூறி உள்ளார்.

***<u>பிரதமர் மத்திய அமைச்சரவை</u>***

டெல்லி, அரியானா, மகாராஷ்டிரா, மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் மல்டி-டிராக் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் ரயில்வே உள்கட்டமைப்பு வலுப்படும் என்றும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். 10--ஆயிரம் கோடி ரூபாய் முலதனத்துடன் கூடிய புத்தாக்க இந்தியா 2-ஆம் கட்ட நிதி ஆதரவு திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய

தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இன்று காலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார். அசாம் மாநிலத்தில் 18 ஆயிரத்து 620 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட இருக்கும் இரட்டை சுரங்கப்பாதை திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் கூறினார். இத்திட்டம் 34 கிலோமீட்டருக்கு செயல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

***சிக்னல்***

இந்திய ராணுவத்தின் சிக்னல் படை இன்று தனது 116-ஆவது நிறுவன தினத்தை கொண்டாடுகிறது.

1911-ஆம் ஆண்டு பிப்ரவரி 15-ஆம் தேதி பதேகரில் லெப்டினன்ட் கர்னல் எஸ் எச் பவல் தலைமையில் உருவாக்கப்பட்டது. இந்திய சிக்னல் படை முதலாம் உலகப் போர் மற்றும் 2-ஆம் உலகப் போருக்கு முக்கிய பங்களிப்புகளைச் செய்துள்ளது. அதன் நூறாவது ஆண்டு விழா 2010-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதி கொண்டாடப்பட்டது.

இந்த சிக்னல் படை இந்திய ராணுவத்தின் தகவல் தொடர்புகளை மாற்றி அமைத்து 21-ஆம் நூற்றாண்டின் டிஜிட்டல் புரட்சியுடன் இணைந்துள்ளதாக சிக்னல் அதிகாரி லெப்டினன்ட் ஜென்ரல் விவேக் டோக்ரா தெரிவித்துள்ளார்.

***நிர்மலா***

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், ஜெர்மனியில் பவேரியாவைச் சேர்ந்த ஐரோப்பிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் அமைச்சர் திரு எரிக்பெய்ஸ் வெங்கரேவை சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பு குறித்து சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ள திருமதி நிர்மலா சீதாராமன் ஜெர்மனி சான்சிலர் கடந்த வாரம் மேற்கொண்ட இந்திய

பயணத்தைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே நிலவும் இருதரப்பு கூட்டாண்மையை எவ்வாறு வலுப்படுத்துவது என்பது குறித்து ஆலோசனை மேற்கொண்டதாக தெரிவித்தார். இந்திய-ஜெர்மனியின் தடையற்ற ஒப்பந்தம் குறித்தும் பசுமை மற்றும் நீடித்த கூட்டாண்மை பருவநிலை தொடர்பான நிதிகளை ஆராய்வது குறித்தும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இரு நாடுகளிலும் மறுசுழற்சி தொழில்களில் மேற்கொள்ளப்படும் சிறந்த நடைமுறைகள் பகிர்ந்து கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

*__ஜெய்சங்கர்__*

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஜெர்மனி சென்றுள்ளார். அங்கு நடைபெறும் மியூனிச் பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்ட அவர் மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே ஜெர்மனி, ஜப்பான் பிரேசில் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்தித்துப் பேசினார். இந்தியா, ஜெர்மனி பிரேசில் ஆகிய நாடுகளைக் கொண்ட ஜி-4 கூட்டத்தில் சமூக சீர்திருத்தம் குறித்து அமைச்சர்கள் ஆலோசனை நடத்தினர். உறுப்பு நாடுகளான இந்தியா மற்றும் பிரேசிலுடன் உறவுகளை வலுப்படுத்த ஜெர்மனி விரும்புவதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். இதுகுறித்து சமூக ஊடகப் பதிவில் கருத்து தெரிவித்துள்ள டாக்டர் ஜெய்சங்கர். சமூக சீர்திருத்தம் குறித்து ஜெர்மனி, ஜப்பான் பிரேசில் ஆகிய நாடுகளின் அமைச்சர்களுடன் விவாதித்ததாக தெரிவித்தார்.

__கடல்சார்__

இந்திய கடல்சார் வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத வகையில் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணத்தில் இன்று முதல் வருகிற 25-ஆம் தேதி வரை, ஒரே நேரத்தில் 3 முக்கிய சர்வதேச நிகழ்வுகள் நடைபெற உள்ளது. முதல்

முறையாக இந்தியா சார்பில் நடைபெற உள்ள இந்த நிகழ்ச்சியில் பல்வேறு சாகச நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பல்வேறு நாடுகளில் போர்க் கப்பல்கள் மற்றும் கடற்படை பிரிவுகள் ஒன்றிணைந்து கூட்டுப் பயிற்சியில் ஈடுபட உள்ளன. அதேபோல் இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் கடற்படைத் தலைவர்கள் பிராந்தி பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு குறித்து முக்கிய ஆலோசனைகள் மேற்கொள்ள உள்ளன.

<u>சைக்லோத்தான்</u>

இந்திய கடலோர பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கடந்த மாதம் 28-ஆம் தேதி முதல் வந்தேமாதரம் கடலோர சைக்லோத்தான் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் வந்தே மாதரம் சைக்லோத்தான் விழிப்புணர்வு பயணக் குழு இன்று புதுச்சேரி வந்தது. இதில் 33 பெண்கள், 31 ஆண்கள் என மொத்தம் 64 மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் பங்கேற்றுள்ளனர். இந்த சைக்கிள் பேரணியை புதுச்சேரி என்சிசி குழுத் தலைவர் கர்னல் ஸ்ரீ ஆசிஷ் திவாரி, சிஐஎப்எஸ் பிரிவு அதிகாரி ஸ்ரீ பகாரியா உள்ளிட்ட அதிகாரிகள் கொடி அசைத்து தொடக்கி வைத்தனர். இந்த சைக்கிள் பேரணி மீண்டும் புதுச்சேரியில் இருந்து கடலூர் வழியாக, தங்கள் விழிப்புணர்வு சைக்கிள் பயணத்தை தொடங்கியது.

<u>அஸ்வினி வைஷ்ணவ்</u>

முதல் வகுப்பு ரயில் பெட்டிகளுக்கு இணையாக பொது வகுப்பு பெட்டிகளிலும் தூய்மை பராமரிக்கப்படுவதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் ரயில்வே சீர்திருத்தங்கள் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்த தூய்மை பணிகளை முன்னெடுக்க முதல் கட்டமாக 80 தொலை தூர ரயில்கள் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்தார். 6 மாதங்களுக்கு இந்த ரயில்கள்

அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். குறைந்த பட்சம் 1 மணி நேரத்தில் இருந்து ஒன்றரை மணி நேரத்திற்கு ஒருமுறை இதற்கென பிரத்யேகமாக நியமிக்கப்படும் தூய்மைப் பணியாளர்கள் இந்த பணியை மேற்கொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

<u>கிரிக்கெட்</u>

உலக கோப்பை டி-20 கிரிக்கெட் போட்டியில் இன்று மாலை கொழும்பில் உள்ள பிரேமதாசா மைதானத்தில் இந்திய-பாகிஸ்தான் அணிகள் விளையாட உள்ளன. இந்தப் போட்டி இந்திய நேரப்படி இரவு 7 மணிக்கு தொடங்க உள்ளது. 2 அணிகளும் தங்கள் முதல் 2 போட்டிகளில் வெற்றி பெற்று தலா 4 புள்ளிகளுடன் சமநிலையில் உள்ளன. அதனால் அரை இறுதியில் இடம் பெறுவதற்காக இன்றைய போட்டி முக்கியமானதாக கருதப்படுகிறது.

*<u>பிரதமர்-சாலை விபத்து</u>*

சாலை விபத்துக்களில் சிக்கியவர்களுக்க உடனடி சிகிச்சை அளிக்கும் ராஹத் திட்டத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஒப்புதல் அளித்துள்ளார். பிரதமரின் ஒப்புதலுக்கு பின்னர் இந்த திட்டம் செயல்பாட்டிற்கு வந்த். இந்த திட்டத்தின் கீழ் சாலை விபத்துக்களில் காயம் அடைந்தவர்களுக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கும் வகையில் முதல் 7 நாட்களுக்கு அரசு சார்பில் நிதி வழங்கப்படும். சாலை விபத்துக்களால் காயம் அடைந்தவர்களுக்கு உடனடி மருத்துவ சிகிச்சை கிடைக்காத நிலையில் பல உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இந்த உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை சார்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்திற்காக வழங்கப்படும் ஒன்றரை லட்சம் ரூபாய் மோட்டார் வாகன நிதியில் இருந்து வழங்கப்படும் என அமைச்சகம் தெரிவித்துள்ளது. கருணை அடிப்படையில் உரிய நேரத்தில் அளிக்கப்படும் சிகிச்சையால்

விபத்தில் உயிர் இழப்பவர்களின் உயிர் காப்பாற்றப்படும் என அமைச்சகம் தெரிவித்துள்ளது.

***<u>ரங்கசாமி-அமித் □ ா</u>***

காரைக்கால் வந்திருந்த மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, அடுத்த 5 ஆண்டுகளில் புதுச்சேரியை வளர்ச்சி அடைந்த மாநிலமாக உருவாக்கும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி சில அறிவிப்புகளை வெளியிட இருப்பதாக அறிவித்தார். பின்னர் திரு அமித் ஷாவை முதலமைச்சர் திரு ரங்கசாமி சந்தித்துப் பேசினார். எதிர்வரும் சட்டப்பேரவை தேர்தல் கூட்டணி குறித்து ஆலோசனை நடத்தினர். இந்த சந்திப்பிற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் திரு ரங்கசாமி பாஜக-வுடன் தேர்தல் கூட்டணியை உறுதி செய்தது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

***<u>ஜோஷி</u>***

இந்திய-அமெரிக்க இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் இந்தியாவின் ஜவுளித் துறையின் வளர்ச்சிக்கு ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும் என்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில் விடுத்துள்ள செய்தியில் இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்த த்தில் 113.76 மில்லியன் டாலர் கட்டண குறைப்புகளின் மூலம் ஏற்றுமதி போட்டியை மேம்படுத்துவதாக தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஆயத்த ஆடைகள், கம்பளங்கள், போன்றவை ஜவுளி துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளதாக தெரிவித்துள்ளார்.